A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**
**மேல்முறையீட்டு மனு எண் 69 / 2020**

திரு.மு.நல்லசாமி,
16, இந்திராகாந்தி வீதி,
பெருந்துறை சாலை,
ஈரோடு – 638 011. . . . . மேல்முறையீட்டாளர்
(திரு.மு.நல்லசாமி)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

2. உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவி மின்பொறியாளர்/நசியனூர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SF No. 45/4, திஙகலூர் ரோடு,
நசியனூர் – 638 107. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. C. ராமசந்திரன், செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு
திரு.P.அன்புசெழியன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ஈரோடு
திரு.R.S. ராஜேஷ்சேகரன், உதவி மின்பொறியாளர்/நசியனூர்)

**கேட்புரை நாள்: 03–02–2021**

**ஆணை நாள் : 08–07–2021**

11.12.2020 அன்று பெறப்பட்ட திரு.மு.நல்லசாமி, 16, இந்திராகாந்தி வீதி, பெருந்துறை சாலை, ஈரோடு – 638 011 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண். 69/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 03.02.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதஙகள், எதிர்மனுதாரரின்

பதிலுரையிலுள்ள வாதஙகள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழஙகப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் தனது மனைவி பெயரில் இருந்து தனது பெயருக்கு புல எண் 80/1-ல் உள்ள கிணற்றுக்கு பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழஙகுமாறு விண்ணபபித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் தனது புல எண் 82/1B-ல் உள்ள கிணற்றில் போதிய தண்ணீர் இன்றி வறண்டுள்ளதால் புல எண் 80/1-ல் உள்ள கிணறு போதிய தண்ணீருடன் விவசாய பயன்பாட்டில் உள்ளதாலும் கந்தாம்பாளையம் கிராமம் புல எண் 82/1B-க்கு பதிவு செய்த விவசாய மின் இணைப்பை தனது மனைவி விஜயலட்சுமி பெயரில் இருந்து தனது பெயருக்கு 80/1-ல் உள்ள கிணற்றுக்கு பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழஙகிடுமாறு உதவி பொறியாளர்/நசியனூர் அவர்களிடம் விண்ணபபத்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்திற்கு புல எண் 82/1B-ல் உள்ள கிணறு தண்ணீர் இன்றி வறண்டு உள்ளது என்பதற்கு பதிலாக கிணறு இல்லை என்று தவறுதலாக உதவி பொறியாளர்/நசியனூர் பதிவு செய்தார் என்றும், கிணறு தண்ணீர் இன்றி வறண்டு உள்ளது என்று கிராம நிர்வாக அலுவலர் சான்று வழஙகியதை மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ளார்.

2.3 எனவே புல எண் 82/1B-ல் உள்ள கிணற்றுக்கு பதிவு செய்த விவசாய மின் இணைப்பை தனது மனைவி விஜயலட்சுமி பெயரில் இருந்து தனது பெயருக்கு மாற்றியும், புல எண் 80/1–ல் உள்ள கிணற்றுக்கு மாற்றியும் தருமாறு மேல்முறையீட்டாளர் ஈரோடு மின் பகிர்மான வட்டத்தை 10.02.2020 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், ஈரோடு மின்பகிர்மான வட்டம் 11.09.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 11.09.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"<u>முடிவுரை</u>*
>
> *மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்டத்தில் நடைபெற்ற விசாரணையின் அடிப்படையிலும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் ஆராய்ந்து பார்க்கும் போது ரீ.ச. எண்.82/1B ல் உள்ள கிணறு மூடப்பட்டது என்பதற்கு வருவாய் வட்டாச்சியரிடம் இருந்து ஆவணங்கள் எதுவும் சமர்பிக்கப்படாததாலும் அங்கு விவசாய பயன்பாடு இல்லாமல் வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வந்ததாலும் மனுதாரரின் கோரிக்கையான ரீ.ச. எண்.82/1B ல் உள்ள கிணற்றிற்கு பதிவு எண். 2601/1989–1990 நாள் 15.03.1990 பதிவான விவசாய விண்ணப்பத்தை 80/1க்கு கிணறு மாற்றம் செய்ய இயலாது என்றும் விண்ணப்பத்தின் கால அவகாசம் 5 வருடஙகளுக்கு மேலானதால் விண்ணப்பத்தை செயற்பொறியாளர்/ நகரியம் அவர்களால் ரத்து செய்யப்பட்டது சரியே எனவும் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலிக்க இயலாது எனவும் மனுவை மன்றம் தள்ளுபடி செய்கின்றது. மேலும் மனுதாரர் தனக்கு புதிய விவசாய மின் இணைப்பு வேண்டினால் விவசாய பயன்பாடுள்ள தனக்கு பாத்தியப்பட்ட புதிய இடத்தில் விவசாய விண்ணப்பம் அளித்தால் புதிய குறியீடுகள் பெறப்படும் போது ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசால் நிர்ணயிக்கப்படும் இலக்கின் அடிப்படையில் வரிசைக்கிரமாய் அக்கிணற்றிக்கு மின் இணைப்பு வழஙகப்படும் என்று இம்மன்றத்தின் இறுதி உத்தரவு வழஙகப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தஙகளது தரப்பு வாதஙகளை எடுத்துரைப்பதற்கு வசதியாக 03.02.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு.மு.நல்லசாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு. C. ராமசந்திரன், செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு, திரு.P.அன்புசெழியன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ஈரோடு மற்றும் திரு. R.S. ராஜேஷ் சேகரன், உதவி மின்பொறியாளர்/நசியனூர், ஈரோடு மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தஙகளுடைய வாதஙகளை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதஙகள்

மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணஙகள் அல்லது பணியாளர் ஒழுஙகு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுஙகுமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதஙகள்:</u>

5.1 பெருந்துறை வட்டம் கந்தாம்பாளையம் கிராமம் புல எண். 82/1B-ல் இருந்த திறந்த வெளி கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி மனு செய்து அது பதிவு எண் 2601 நாள் 15.03.1990 ஆக பதிவு செய்யப்பட்டதாகவும் மின்பதிவை சுயநிதி திட்டத்தில் ரூ.10,000/– செலுத்தி மின் இணைப்பு பெற ரூ.500/– செலுத்தி மனு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்கூறிய மனுவிற்கு இளமின் பொறியாளர்/நசியனூர் அவர்கள் கிணறு தண்ணீர் இன்றி வறண்டு உள்ளது என்பதற்கு பதிலாக கிணறு இல்லை என்று தவறாக 18.10.2002ல் பதிவு செய்ததாகவும் கிணறு தண்ணீர் இன்றி வறண்டு உள்ளது என கிராம நிர்வாக அலுவலர் 17.07.2002 இல் சான்று வழஙகியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேலும் இயல்பு வரிசையில் இருந்த மின் பதிவு எண் 2601ஐ சிறப்பு முன் உரிமை திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற 90 நாள் அறிவிக்கைக்கு பதில் 17 நாள் அவகாசம் கொடுத்து அறிவிக்கை அனுப்பப்பட்டதாகவும், செயற்பொறியாளர் அவர்களது 03.11.2010 நாளிட்ட கடிதத்திலிருந்து ஐந்து வருடஙகளுக்குள் இயல்பு வரிசையில் மின் இணைப்பு பெற அறிவிக்கை கொடுக்கப்பட்டு அந்த அறிவிக்கையில் கால அவகாசம் கொடுத்து சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற வாய்ப்பு கொடுக்கப்பட்டதாகவும், சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற முன் வரவில்லை என்றும், மீண்டும் இயல்பு வரிசைக்கு மாற்றி மின் இணைப்பு பெற 01.07.2011 முதல் தொடர்ச்சியான கால அவகாசத்திற்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதியை பெற்ற பின் 03.11.2010–லிருந்து ஐந்து ஆண்டு காலத்திற்குள் தயார்நிலை பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் உரிய காலத்தில் புல எண் 82/1B க்கும் பின்னர் நசியனூர் உதவி மின் பொறியாளர் திரு. அன்புச்செழியன் அவர்கள் கள ஆய்வின் போது ஆவணஙகளை ஆய்வு செய்தும் புல எண் 80/1 இல் உள்ள திறந்த வெளி கிணற்றை ஆய்வு செய்தும் அதற்கு உண்டான ஆவணஙகளுடன் தயார் நிலை பதிவு செய்ய கேட்டதன் பேரில் 10.08.2015 இல் கந்தாம்பாளையம் கிராமம் புல எண் 82/1B–ல் இருந்து புல எண் 80/1–ல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு புல எண் மாற்றம் மற்றும் பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழஙக தேவையான அனைத்து ஆவணஙகளுடன் மனு செய்ததாகவும், மனுவை பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதி செய்து ஒரு வாரம் கழித்து பெருந்துறை வட்டாட்சியரிடம் 1990ல் மனு செய்யும்போது கிணறு இருந்ததற்கான சான்றும் 2015–ல் கிணறு மூடப்பட்டதற்கான சான்றும் பெற்று வர 17.08.2015–ல் கடிதம் கொடுத்ததாகவும், 2002–ல் இருந்த கிராம நிர்வாக அலுவலர் கிணறு தண்ணீர் இன்றி வறண்டுள்ளது என்று சான்றும், தற்போது கிணறு சிறிதளவு தண்ணீருடன் தண்ணீர் நின்ற கரையுடன் தண்ணீர் எடுத்து சென்ற குழாய்களுடன் உள்ளது என்றும், நேரில் கள ஆய்வில் பார்த்து உள்ளீர்கள் என்றும் கடிதத்தில் கேட்டபடி வட்டாட்சியரிடம் தவறான சான்று பெற இயலாது என கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 உதவி பொறியாளர்/நசியனூர் கள ஆய்வில் கிணறு மூடப்பட்டது என பதிவு செய்யவில்லை என்றும், பாறை உடைத்ததால் கிணறு ஆழம் மற்றும் அகலம் ஆகி விட்டதென்றும், பாறை உடைந்ததால் கிணறு மூடப்பட்டது என்பது தவறானது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் ஈரோடு நகரிய மின் செயற்பொறியாளர் அவர்கள் மின் பதிவை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தயார் நிலை பதிவு செய்திட தகுதியானது இல்லை என்று தெரிவித்ததாகவும், மனுவை மேற்பார்வை பொறியாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின் மேற்பார்வை பொறியாளர் பணிமூப்பு பெற்று சென்று விட்டதால் தனது மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 2003, 2006, 2007, 2010 ஆம் ஆண்டுகளில் புல எண். 80/1,2,3,4,5,6,7,8, 83/1,2,3,4,5, 81/2,3,4 போன்றவைகளை கல்குவாரி பணிகள் மற்றவர்கள் மூலம் தடையின்றி நடைபெற 82/1Bஐ ஒட்டிய பூமிகளை கிரையம் பெற்று மேற்படி பூமிகளில் 80/6 மற்றும் 83/1 ஆகிய பூமிகளில் கிணறு மற்றும் மின் இணைப்புகளும் 80/1 மற்றும் 81/2 இல் ஆயில் என்ஜினுடன்

கிணறு இருந்ததாகவும், கீழ்ப்பவானி பிரமான வாய்க்காலின் வலதுபுறம் அதாவது மேல்கரையை ஒட்டிய பகுதிகளான 80/1, 80/3, 81/2 மற்றும் 83/1 உள்ள கிணறுகள் மழை மற்றும் கீழ்பவானி கால்வாயின் கசிவு நீரை ஆதாரமாக கொண்டது என தெரிவித்துள்ளார். மேலும் கல்குவாரிகள் கீழ்பவானி கால்வாயில் இருந்து 50 மீட்டருக்கு அப்பால் தான் இருக்க வேண்டும் என்ற விதி உள்ளதால் கீழ்பவானி கால்வாய் ஓரம் விவசாய பூமிகளாகத்தான் இருக்க வேண்டும். ஆகையால் வாய்க்கால் ஓரமும், பாறை இல்லாத இடத்தில் விவசாயம் செய்ய கிணறும், மின் இணைப்பும் தேவை என்பதால் இந்த மின் இணைப்பிற்கு முயற்சி செய்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும் 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை தங்களது இரண்டு விவசாய மின் இணைப்புகள் மற்றும் கல் உடைப்பு ஆலை மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு மின் கம்பங்கள் எடுக்கப்பட்டு இருந்ததாகவும் ஆகையால் சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் கீழ் 2010 ஆண்டு தகுதியானவருக்கு கொடுக்கப்பட்ட 90 நாள் அறிவிக்கை தங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றும் 03.11.2010–ல் 20.11.2010–க்குள் 17 நாள் கால அவகாசம் மட்டும் கொடுத்து அறிவிக்கை அனுப்பப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 21.11.2011 அறிவிக்கை இயல்பு வரிசையில் மின் இணைப்பு பெற 5 ஆண்டு கால அவகாசம் கொடுத்து வழஙகப்பட்டதாகவும் அதில் 03.11.2010 வழஙகப்பட்ட நிபந்தனைகள்படி குறிப்பிட்ட தேதிக்குள் தங்களது தயார் நிலையை பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டபின் அனைத்து ஆவணஙகளுடன் மனு சமர்பிக்கப்பட்டதாகவும் அந்த மனு உதவி மின்பொறியாளர்/நசியனூர் அவர்கள் புல எண் 82/1B மற்றும் 80/1 திறந்த வெளி கிணறு ஆகியவைகளை கள ஆய்வு செய்து புல எண் 80/1 ல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி தயார் நிலை பதிவு செய்ய மனு 10.8.2015–ல் கொடுக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 எனவே, புல எண்.82/1Bல் இருந்த திறந்த வெளி கிணற்றுக்கு மின் பதிவு எண் 2601 நாள் 15.03.1990 ல் செய்யும் போது கிணறு இருந்தது. அதற்கு அப்போது இருந்த கிராம நிர்வாக அலுவலர் சான்று செய்துள்ளார் என்றும் அதனை மின் அதிகாரிகள் பார்வையிட்டு மின் பதிவு செய்துள்ளதாகவும் 2002–ல் கிணறு உள்ளதையும் கிணறு தண்ணீர் இன்றி வறண்டு உள்ளதையும் கிராம நிர்வாக அலுவலர் சான்று செய்துள்ளார் எனவும் தற்போது கிராம நிர்வாக அலுவலர் புல எண் 82/1B-ல் கல் உடைத்து ஒரே பாறை குழியாக உள்ளதால்

கிணறு மூடப்பட்டது என்றும் புல எண் 82/1B-ல் இருந்த கிணறு இன்றும் இரண்டு பக்கச் சுவற்றுடன் உள்ளதாகவும் வேண்டுமானால் நேரில் ஆய்வு செய்து உண்மையை கண்டறியலாம் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.11** புல எண் 82/1B-ல் உள்ள கிணறு போதிய தண்ணீர் இன்றி வறண்டுள்ளதாலும் புல எண் 80/1-ல் உள்ள கிணறு போதிய தண்ணீருடன் விவசாய பயன்பாட்டில் உள்ளதாலும் கந்தாம்பாளையம் கிராமம் புல எண் 82/1B-க்கு பதிவு செய்த விவசாய மின் இணைப்பை தனது மனைவி விஜயலட்சுமி பெயரில் இருந்து தனது பெயருக்கு 80/1-ல் உள்ள கிணற்றுக்கு பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழஙகிட உத்தரவு பிறப்பிக்குமாறு மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

**6.0** **<u>எதிர்மனுதாரரின் வாதஙகள்:</u>**

**6.1** திருமதி விஜயலட்சுமி, க/பெ. நல்லசாமி என்பவர் இயல்பு வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்ப பதிவு எண் **2601/1989–90**, நாள் **15.03.1990** மூலமாக விண்ணப்பம் பதிவு செய்ததாகவும் இதனை தொடர்ந்து சுயநிதித் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற சம்மத கடிதம் **08.08.2002** ல் அளித்ததாகவும் இதன் அடிப்படையில் உதவி மின்பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் பொழுது சர்வே எண் **82/1B –**ல் அமைந்துள்ள திறந்தவெளி கிணறு மூடப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.2** சிறப்பு முன்னுரிமையில் மின் இணைப்பு வழஙக விண்ணப்பதாரருக்கு தயார் நிலை பதிவு செய்யுமாறு க.எண்.செ.பொ.நகரியம், ஈ.வ.ஆ/கோ.விவ/எ**631/2010**, நாள் **03.11.2010** மற்றும் க.எண்.செ.பொ.நகரியம், ஈ.வ.ஆ/கோ.விவ/எ**631/2010**, நாள் **21.11.2011** ஆகிய இவ்வலுவலக கடிதஙகளின் வாயிலாக தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.3** கந்தாம்பாளையம் கிராமம், சர்வே எண் **82/1B–**ல் அமைந்துள்ள நிலம் திரு நல்லசாமி அவர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளதாகவும், எனவே அவ்விண்ணப்பத்தினை திரு நல்லசாமி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக்கோரியும், மேலும் அந்நிலத்தில் பாறைகள் உடைக்கப்பட்டதின் காரணமாக அதில் அமைந்துள்ள கிணறு மூடப்பட்டுவிட்டதால் திரு நல்லசாமி அவர்களுக்கு சொந்தமான சர்வே எண் **80/1–**ல் அமைந்துள்ள மற்றொரு

திறந்தவெளிக் கிணற்றிற்கு சர்வே எண் மாற்றம் செய்து தர கோரியும் 10.08.2015 அன்று விண்ணப்பம் செய்திருந்தார். இதன் அடிப்படையில் உதவி மின்பொறியாளர்/இ.பே/ நசியனூர் அவர்கள் அவ்விண்ணப்பத்தினை பரிசீலிக்கும் பொழுது கிராம நிர்வாக அலுவலர் சான்றிலும் மற்றும் தனி வரைப்படத்திலும் கிணறு குறிப்பிட்டுள்ளது. ஆனால் அடங்கலில் பாறை தரிசு என்றும் சான்று அளிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும் அதன் தொடர்பாக வட்டாட்சியரிடம் சான்று பெற்று அளிக்குமாறு உதவி மின்பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்களால் 17.08.2015 அன்று திரு நல்லசாமி அவர்களுக்கு கடிதம் வழஙகப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

அதன் தொடர்பாக மீண்டும் திரு நல்லசாமி அவர்கள் 23.09.2015 மற்றும் 04.11.2015 நாளிட்டு அளித்துள்ள முறையீட்டு மனுவுடன் கூடிய ஆவணஙகளை பரிசீலனை செய்ததில், கந்தாம்பாளையம் கிராமம், சர்வே எண் 82/1B–ல் அமைந்துள்ள நிலம் 18.02.2010 அன்று பாக சாசனத்தின் அடிப்படையில் திரு நல்லசாமி அவர்களுக்கு சொந்தமாகிறது என்பதும் ஏற்கனவே மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் அனுமதி பெற்று 1996 முதல் 2007–ம் ஆண்டு வரையிலான காலகட்டஙகளில் அந்நிலத்தில் வணிக நோக்கத்திற்காக கல் உடைக்கப்பட்டு அதில் அமைந்துள்ள விவசாய நிலம் அழிக்கப்பட்டும், கிணறு மூடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேலும் உதவி மின்பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்பொழுதும் மேற்படி நிலம் முற்றிலும் பாறைகள் வெட்டப்பட்டு குழியாக உள்ளதும், விவசாய பயன்பாடில்லாமல் இருந்து வருவதும் கண்டறியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 திரு நல்லசாமி அவர்கள் அளித்துள்ள ஆவணஙகளின் அடிப்படையிலும், மேற்படி சர்வே எண் 82/1B–ல் அமைந்துள்ள நிலம் மற்றும் கிணறு மீதான களஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையிலும் அந்நிலம் தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறைகளுக்கு முரணாக வர்த்தக நோக்கத்திற்காக கற்கள் வெட்டியெடுக்கப்பட்டு திறந்தவெளி கிணறு மூடப்பட்டுள்ளதும் மற்றும் அந்நிலம் பாறை குழியாக விவசாய பயன்பாடில்லாமல் இருந்து வருவதும் கண்டறியப்பட்டதால் திரு நல்லசாமி பெயருக்கு பெயர் மாற்றம் மாற்றும் சர்வே எண் மாற்றம் செய்ய பரிசீலனை செய்ய இயலாது என்ற விவரம் திரு நல்லசாமி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 திரு நல்லசாமி அவர்கள் தனது பெயருக்கு பெயர் மாற்றம் மற்றும் சர்வே எண் மாற்றம் செய்ய பரிசீலனை செய்ய தொடர்ந்து மனு அளித்துவந்ததால் இப்பொருள் குறித்து தலைமையிடத்திடம் உரிய வழிகாட்டுதல் வேண்டப்பட்டதாகவும், அவ்வழிகாட்டுதலை கீழ்கண்டவாறு எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

(1) மின் இணைப்பு கோரி பதிவு செய்யப்பட்ட கந்தாம்பாளையம் கிராமம் சர்வே எண் 82/1B–ல் நிலம் பாறையாக அமைந்துவிட்ட காரணத்தினால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதி பெற்று 1996–ம் ஆண்டு முதல் 2007–ம் ஆண்டு வரை அப்பகுதியில் பாறை உடைக்கப்பட்டதில் கிணறு மூடப்பட்டு சர்வே எண் 82/1B–ல் இருந்ததாக கூறப்படும் கிணறு விவசாயம் செய்ய இயலாமல் உள்ளதும் விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் கண்டறியப்பட்டதில் சர்வே எண் 82/1B–ல் கிடைக்கப் பெற்றுள்ள பாறை முற்றிலும் உடைக்கப்பட்டு குழியாக உள்ளது என்று உதவி பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்களால் நேரடி கள ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

(2) கந்தாம்பாளையம் கிராமம் சர்வே எண் 82/1B–ல் இருந்ததாக கூறப்படும் கிணறு தற்போது பெயர் மாற்றம் கோரும் திரு மு.நல்லசாமி அவர்களுக்கு பாத்தியப்படுவதற்கு முன்னரே வணிக நோக்கத்திற்காக ஈரோடு மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களால் அனுமதி வழஙகப்பட்டு பாறை உடைத்ததில் மேற்படி கிணறு மூடப்பட்டதால் திருமதி விஜயலட்சுமி அவர்களின் பெயரில் பதிவான விண்ணப்பத்தினை அவரது கணவராகிய திரு நல்லசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட கந்தாம்பாளையம் கிராமம் சர்வே எண் 80/1–ல் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றிற்கு பெயர் மற்றும் சர்வே எண் மாற்றம் செய்து மின் இணைப்பு வழஙகிட ஏதுவான ஒன்றாக இல்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

(3) விண்ணப்பதாரர் மின் இணைப்பு கோரி பதிவு செய்யப்பட்ட இடமானது தற்போது விவசாய பூமியாக இல்லை எனத் தெளிவாக தெரிய வருகின்றதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

(4) மேலும், தலைமைப் பொறியாளர் திட்டமிடல் சென்னை அவர்கள் தனது 22.03.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக 90 நாட்கள் தயார்நிலை அறிவிப்புக் கடிதம் வழஙகப்பட்டு 8 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால், இனிவரும் காலத்தில் தயார்நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு கோரும் எந்தவொரு கருத்துருவுக்கும் அனுமதி வழஙக

வேண்டாம் எனப் பகிர்மானம் தலைமைப் பொறியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.6** எனவே, திரு நல்லசாமி த/பெ. முத்துசாமி, **16,** இந்திரா காந்தி வீதி பெருந்துறை சாலை, ஈரோடு அவர்கள் தனது மனைவி திருமதி விஜயலட்சுமி அவர்கள் கந்தாம்பாளையம் கிராமம், சர்வே எண் **82/1B**–ல் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு **5** குதிரைத் திறன் மின் இணைப்பு வேண்டி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தனது பெயருக்குப் பெயர் மாற்றம் மற்றும் க.ச.எண். மாற்றம் கோரிய விண்ணப்பமானது பரிசீலனை செய்ய இயலாது எனத் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.7** ஆகவே, பெருந்துறை வட்டம் கந்தாம்பாளையம் கிராமம் சர்வே எண் **82/1B**–ல் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றிற்கு இயல்பு வரிசையில் மின் இணைப்பு வழஙகுவதற்காக திருமதி விஜயலட்சுமி, க/பெ. நல்லசாமி என்பவர் பெயரில் பதிவு எண். **2601/1989–90** நாள் **15.03.1990**–ன்படி பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பமானது இரத்து செய்யப்படுகிறது என்ற விவரம் கடித எண் **945 /33** /செ.பொ. /ந/ஈ/வஆ /கோ. விவசாயம்/**2019–2020,** நாள் **08.05.2019**–ன்படி திரு நல்லசாமி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u> :-

**7.1** இருதரப்பு வாதஙகளையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக உள்ளன.

(i) விவசாய விண்ணப்பஙகளுக்கு தயார் நிலையை பதிவு செய்வதற்கு விதிகளின்படி தரப்பட்டுள்ள கால அவகாசம் எவ்வளவு ?

(ii) ஒரு சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வதற்கு உரிய விதிமுறைகள் என்ன?

(iii) இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் பெயர் மாற்றம் மற்றும் சர்வே எண் மாற்றம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்பட வேண்டும் என்ற வாதம் ஏற்புடையதா?

**8.0 <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u> :–**

**8.1** தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட விவசாய மின்னிணைப்புகளுக்கான விதிமுறைகள் **30.12.2020** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கைப் பொறுத்தவரை மேல்முறையீட்டாளரால் **15.03.1990** அன்று பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்திற்கு **03.11.2010** மற்றும் **21.11.2011** நாளிட்ட கடிதங்களின் வாயிலாக தயார் நிலை அறிவுப்பு கடிதம் எதிர்மனுதாரர்களால் வழங்கப்பட்டுள்ளது. அந்த காலகட்டங்களில் விவசாய மின் இணைப்புகளை பொருத்தவரையில், தயார் நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

**8.2** எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள **90** நாட்கள் முடிந்த **5** வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட கடிதத்தை ஆராய விரும்புகிறேன்.

> *"1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice. 2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant. 3. Cancelled applications need not be revoked. 4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

**8.3** மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய **90** நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த **5** வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரண வரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் **90** நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது **(13.12.2010** நாளிட்ட ஆணையின்படி, மேற்கண்ட கால அவகாசம் நிலத்தை வாங்கியவர்களுக்கும் பொருந்தும் என்று தெரிகிறது**).** மேலும் **90** நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு **5** வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

**8.4** மேற்கண்ட தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட ஆணையின்படி விவசாய விண்ணப்பங்கள் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார்நிலையில் பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவினை **90** நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் வாரிசுகள் தங்கள் தயார் நிலையை பதிவு செய்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது.

## 9.0 <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

**9.1** பத்தி **8.1** –ல் உள்ள விளக்கத்தின்படி விவசாய மின்இணைப்பை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வது சம்பந்தமாக மின்சார வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் விவசாய பகிர்மான விதிதொகுப்பு இனங்களில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமைதாரர் ஏற்படுத்திய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும். விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிகளில் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் உள்ள கிணற்றை மாற்றுவதற்கும் பொருந்தும் என்று மின்சார வாரியத்தலைவர் **5–12–1983**ல் வெளியிடப்பட்டுள்ள குறிப்பாணையில் தெரிவித்துள்ளார். மேலும், உறுப்பினர்/பகிர்மானம் அவர்கள் **28–12–1991**ல் அனைத்துத் தலைமைப் பொறியாளர் பகிர்மானத்திற்கும் அனுப்பிய

சுற்றறிக்கையிலும் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். எனவே, விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகள் தான் விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றவும், கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் ஆகும் என்று தெரிய வருகிறது. விவசாய மின்இணைப்பை மாற்றும் விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

(A) <u>Memo No.SE/RE&LL/LO/AE4/GW/114/dt. 17-03-1978:-</u>

It has been brought to notice that many new applicants for power supply try to take advantage of the relaxations given in the two memos quoted under ref.1 and 2 for shifting of services and attempt to get supply circumventing the priority by initially stating that they are co-owners of wells and later on applying for shifting their service to a new location on the plea of "Non-availability of water".

The instructions issued in memos cited 1 and 2 are therefore partially modified as under :

1. The words "non-availability of water" in memo cited (1) are "hereby" deleted.

2. Shifting of agricultural service to a new location may be permitted for the same person due to dryness of well provided the new location is in the same village. The work of shifting should be done as deposit contribution work.

3. Shifting should not be permitted to a new location outside the village. Such cases should be treated as new applications for power supply and dealt with as per rules according to priority, technical feasibility and viability of each work.

4. Shifting of pump sets of enlisting co-owners of wells can also be done as per (2) above only.

5. Extension of supply to new applicants as co-owners of wells may be effected provided their ownership of well is certified by an officer of the Revenue Department not below the rank of a Tahsildar and (2) it is accompanied by a certificate from the Project Officer (ARDC) to the effect that there is adequate water for both the pump sets in the same well.

(B) <u>Chairman Memo No.SE/RE/DE/SS/A1/C 473-1/83, dated 05-12-1983</u>.

1. Shifting of agricultural services from the existing well to another well can be permitted in respect of the following cases subject to technical feasibility:-

(i) Shifting from one well to another belonging to the same consumer within the same distribution group of transformers irrespective of the village and

(ii) Shifting from one well to another belonging to the same consumer within the same village even if it involves a change from one distribution group of transformers to another.

2. The above work will be done as a deposit contribution work.

3. This concession will be applicable even in respect of pending applications i.e. where the service has still not been sanctioned but the applicant desires to change the location of the service to another well owned by him.

4. Particular care should be taken to ensure that this concession is not abused for trafficking in agricultural service connections. The Assistant Divisional Engineer concerned should personally enquire into the case and satisfy himself that the new well and the lands to be irrigated by it belong to the consumer and the request of the consumer is for bonafide reasons. He should record his inspection note in this regard on the relevant file.

(C) Memo No.SE/RE&I/(D)/DE/SS/A1/C473-3/84,(Technical Branch), dated 10-07-1984

Sub: Electricity – shifting of services from one well to another

Ref: Memo No.SE/RE&I(D)/DE/SS/A1/C/473-1/84, dt.5.12.83.

Memo No.SE/RE&I(D)/DE/SS/A1/C.473-2/84, dt.17.5.84

****

Further, to the instructions issued to memos cited on shifting of agricultural services at the request of the consumers the following instructions are issued. Requests for extension of supply to a well owned by the applicant in a different location in lieu of the one for which application was presented may also be considered even if estimate for the work has been sanctioned subject to the condition that the works should not have been taken up as on the date of request of the applicant. Conditions outlined in paras 1 and 2 of memo cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in para4 of the memo should be scrupulously followed.

(D) Memo No.SE /RE&I/(D)/DE(SS)/A1/C473-5/84,(Technical Branch), dt, 7-1-1985

Sub: Electricity – shifting of agricultural service from one well to another –

Ref: (i) Memo No.SE/RE&I(D)/DE(SS)/A1/C/473-1/84, dt.5.12.83.

(ii) Memo No.SE/RE&I(D)/DE/(SS)/A1/C.473-2/84, dt.17.5.84.

(iii) Memo No.SE/RE&I(D)/DE/(SS)/A1/C.473-3/84, dt.10.7.84.

****

The last para of the memo third cited shall be deleted and the following shall be substituted. Conditions outlined in paras (1) subparas (i) and (ii) and para (4) of memos cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in paras should be scrupulously followed.

(E) Chairman’s Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/D.408/90 (Technical Branch), dated 30-07-1990

*********

Shifting of agricultural service connection from the existing well to another well in another village belonging to the same consumer may be permitted in the case of the

proposed well, being located within the jurisdiction of the same Section even if it is not in the same distribution group transformers. However, such cases shall be permitted by Superintending Engineer of the Circle concerned with on receipt of personal site inspection reports by the Assistant Executive Engineer on the genuineness of the case. Each case shall be carefully examined and orders passed by the Superintending Engineer based on the norms of each case to ensure against abuse.

(F) Circular Memo No. SE/IEMC/EEs/AEE2/AE/F III/A-13(Tech Branch), dated 06-12- 1997.

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer may be permitted in the case of the proposed well being located within the jurisdiction of the same division with other conditions remain the same. However, such case shall be permitted by the Superintending Engineer of the circle concerned with on receipt of personal site inspection reports by the Executive Engineer / Operation & Maintenance concerned on the genuineness of the case. Each case shall be carefully examined and order passed by the Superintending Engineer based on the merits of each cases.

(G) Memorandum No.SE/IEMC/EE3/AEE2/AE/F.S. 23/D.382/89,(Techl.Br.) dated 02-07-1999.

(i) If any consumer under normal priority requests for change of well from the original location to a new location, then no increase in the load will be permitted, under normal priority.

(ii) If the applicant, under normal priority requests for change of well from the original location to a new location with the increase in load then, he may be asked to avail supply under RSFS in the application stage itself.

(iii) If the consumer does not agree for the above, shifting alone may be permitted for the original load, if the required conditions for shifting are satisfied.

(H) Memo No.SE/RE&1(D)/EE/RE/A1/F.Doc/D.2841/04, (Technical Branch), dated 10-12-2004.

Of late, clarifications are being requested by the field SEs / CEs in shifting of agriculture service connection effected under SFS category. Shifting of agricultural service to another well belonging to the same party is to be considered only when the existing well has gone dry.

(I) Letter No.SE/RE&I(D)/EE/RE/A1/F.Doc/D.655/2008 (Technical Branch), dated 05-05-2008.

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer from one division to another division within the Circle may be permitted by the Superintending Engineer of the Circle concerned. (i) with on receipt of personal site inspection reports by EE / O & M concerned on the genuineness of the case and (ii) with the condition that the date of registration of application of the service for which shifting is requested should be cleared in the Division for which shifting is proposed. The other conditions applicable for shifting remain the same. The above instructions also applicable

for pending applications, with the above conditions and the service may be effected under the category for which supply is requested.

(J) Letter No.SE/ RE&I(D)/EE/RE/ A1/F,Doc./D.1519/11 dt.1.12.2011

Sub: Electricity – shifting of agricultural service connection – Reg.

Ref: 1. This Office Lr.No.SE/RE&1/(D)/EE/RE/A1/D241, dt.15.2.2011.

2. This Office Lr.No.SE/RE&I(D)/EE/RE/A1/D6558 dt.6.6.2008.

In the reference (1) letter cited, instructions were issued to consider shifting of agricultural service connection irrespective of the reasons submitted by the applicant under DCW basis.

In supersession of the instructions issued vide reference (1) letter, the following instructions are issued in addition to the instruction issued vide reference (2) letter cited:-

1.0. Shifting of existing agriculture service connection may be permitted only if the existing and proposed location of the land and well/bore well are having agriculture operations.

2.0. The shifting of agriculture service connection may be considered in case of dryness, insufficient water and due to water pollution in the existing well / bore well. 3.0. Necessary certificate from the concerned authorities should be obtained for the reasons stated by the applicant.

4.0. Shifting of existing agriculture service connection should be done under DCW basis.

5.0. These instructions are applicable for all categories of existing agriculture service connections such as Normal, RSFS Schemes, etc.

6.0. This is also applicable for change of location of the well / bore well requested at the application stage itself.

9.2. மேற்கண்ட சுற்றறிக்கை, மற்றும் குறிப்பாணைகளின்படி கீழ்க்கண்ட விதிகளின் பேரில்தான் விவசாய மின்இணைப்பு (அல்லது) விவசாய இணைப்பு விண்ணப்பத்தின் மனுவை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியும் என்று தெரிகிறது.

(i) கிணற்றில் தண்ணீர் இல்லை என்றாலும் நீர் விவசாயத்திற்கு தேவையான அளவு இல்லையென்றாலும், நீர் மாசுபட்டு இருந்தாலும் ஒருவரின் விவசாய மின்இணைப்பு அவருக்குச் சொந்தமான வேறு கிணற்றிற்கு மாற்றப்படலாம். ஆனால், மாற்றப்படுவதற்கு கூறப்படும் காரணத்திற்கான சான்றுகள் சம்பந்தப்பட்ட அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து பெறப்பட்டு இருக்க வேண்டும்.

(ii) இரண்டு கிணறுகளும் ஒரே மின்பகிர்மானத்திலுள்ள மின்மாற்றிகளில் இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அவை வேறு கிராமஙகளில் இருக்கலாம்.

(iii) இரண்டு கிணறுகளும் ஒரே கிராமத்தில் இருந்தால் மின்பகிர்மானம் வேறாக இருந்தாலும், மாற்றப்படலாம்.

(iv) மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு ஆனால் வேலை தொடஙகப்படாமல் இருக்கும் நிலுவையிலுள்ள விண்ணப்பஙகளுக்கும் இது பொருந்தும். இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காக அந்த பகுதி உதவி கோட்ட பொறியாளரால் விசாரிக்கப்பட்டு புதிய கிணறும், நீர் பயன்படுத்தப்படும் நிலஙகளும், நுகர்வோருக்கே சொந்தம் என்பதையும், நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணஙகளுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(v) மேலும் அந்த வேலைக்கு ஆகும் செலவை, நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும். மதிப்பீடு DCWல் செய்யப்படவேண்டும். ஆனால், நிலுவையிலுள்ள விண்ணப்பத்திலுள்ள கிணற்றிற்கு பதில் வேறு கிணற்றில் பெற விரும்பினால் DCW முறையில் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. (DCW-ல் செய்யவேண்டும் என்ற நிபந்தனை 7.1.1985 நாளிட்ட வாரியத்தால் இடப்பட்டுள்ள ஆணையில் நீக்கப்பட்டுள்ளது)

(vi) (அ) சாதரண வரிசையில் (Normal priority) உள்ள நுகர்வோர், கிணறு மாற்ற விரும்பினால், மின்பளுவை (load) அதிகரிப்பதற்கு அனுமதியில்லை.

(ஆ) சாதாரண வரிசையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர் மின்பளுவை அதிகரிக்க வேண்டும் என்றால், விண்ணப்பதாரர், மின்இணைப்பை SFS முறையில் பெற வேண்டும்.

(இ) மேற்கண்ட முறையில் (SFS–ல்) மின்இணைப்பை பெற விரும்பாவிடில், விண்ணப்பித்த மின்பளுவுடன் கிணறு மாற்றப்படலாம், மற்ற மாற்றத்திற்கான விதிகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

(vii) SFS முறையில் பெறப்பட்ட மின்இணைப்புகளும், விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகளின்படி இருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

(viii) ஒரே பிரிவு அலுவலகத்தின் எல்லைக்குட்பட்டு வரும் ஒரு கிராமத்திலுள்ள கிணற்றிலிருந்து மறு கிராமத்திலுள்ள கிணற்றிற்கு அவை வெவ்வேறு மின்பகிர்மான

மின்மாற்றிகளில் இருந்தாலும் மாற்றம் செய்யலாம். ஆனால் அந்த விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையைபற்றி உதவி செயற்பொறியாளரின் ஆய்வறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படவேண்டும்.

(ix) ஒரு கோட்டத்திற்குள் இருக்கும் ஒரு கிணற்றிலிருந்து மற்றொரு கிணற்றிற்கு மாற்றம் கோரும் விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையை, அந்த கோட்டத்தின் செயற்பொறியாளர் ஆராய்ந்து அளிக்கும் அறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படலாம்.

(x) ஒரு கோட்டத்திலுள்ள விவசாய மின்இணைப்பு வேறுகோட்டத்திலுள்ள அந்த மின்நுகர்வோருக்குச் சொந்தமான கிணற்றிற்கு மாற்றிக் கொள்ள மேற்பார்வை பொறியாளர் அனுமதிப்பதற்கு கீழ்கண்ட விதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்பொறியாளர் அவர்கள் அந்த இடத்தை ஆராய்ந்து அந்த விண்ணப்பத்தின் நம்பகத்தன்மை (genuineness)ஐ பற்றி சான்று அளித்திருக்க வேண்டும்.

(ஆ) எந்த விண்ணப்பத்திற்கு கிணறு மாற்றம் கோரப்படுகிறதோ அந்த விண்ணப்பத்தின் பதிவு தேதி வரை உள்ள விண்ணப்பம் மாற்றம் கோரப்படுகிற கோட்டத்தில் மின்னிணைப்பு பெற்றிருக்க வேண்டும்.

**10.0 வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு:–**

**10.1** மேல்முறையீட்டாளர் பெருந்துறை வட்டம் கந்தாம்பாளையம் கிராமம் புல எண். **82/1B**-ல் இருந்த திறந்த வெளி கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி மனு செய்து அது பதிவு எண் **2601** நாள் **15.03.1990** ஆக பதிவு செய்யப்பட்டதாகவும், மின்பதிவை சுயநிதி திட்டத்தில் ரூ.**10,000/–** செலுத்தி மின் இணைப்பு பெற ரூ.**500/–** செலுத்தி மனு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும் இயல்பு வரிசையில் இருந்த மின் பதிவு எண் **2601**ஐ சிறப்பு முன் உரிமை திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற **90** நாள் அறிவிக்கைக்கு பதில் **17** நாள் அவகாசம் கொடுத்து அறிவிக்கை அனுப்பப்பட்டு செயற்பொறியாளர் அவர்களது **03.11.2010** நாளிட்ட கடிதத்திலிருந்து ஐந்து வருடஙகளுக்குள் இயல்பு வரிசையில் மின் இணைப்பு பெற அறிவிக்கை கொடுக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

10.2 மேலும் உரிய ஆவணஙகளுடன் 10.08.2015 இல் கந்தாம்பாளையம் கிராமம் புல எண் 82/1B–ல் இருந்து புல எண் 80/1–ல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு புல எண் மாற்றம் மற்றும் பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழஙக தேவையான அனைத்து ஆவணஙகளுடன் மனு செய்ததாகவும், மனுவை பெற்று கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதி செய்த உதவி பொறியாளர் ஒரு வாரம் கழித்து பெருந்துறை வட்டாட்சியரிடம் 1990ல் மனு செய்யும்போது கிணறு இருந்ததற்கான சான்றும் 2015–ல் கிணறு மூடப்பட்டதற்கான சான்றும் பெற்று வர 17.08.2015–ல் கடிதம் கொடுத்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

10.3 2003, 2006, 2007, 2010 ஆம் ஆண்டுகளில் புல எண். 80/1,2,3,4,5,6,7,8, 83/1,2,3,4,5, 81/2,3,4 போன்றவைகளை கல்குவாரி பணிகள் மற்றவர்கள் மூலம் தடையின்றி நடைபெற 82/1Bஐ ஒட்டிய பூமிகளை கிரையம் பெற்று மேற்படி பூமிகளில் 80/6 மற்றும் 83/1 ஆகிய பூமிகளில் கிணறு மற்றும் மின் இணைப்புகளும் 80/1 மற்றும் 81/2 இல் ஆயில் என்ஜினுடன் கிணறு இருந்ததாகவும், கீழ்ப்பவானி பிரமான வாய்க்காலின் வலதுபுறம் அதாவது மேல்கரையை ஒட்டிய பகுதிகளான 80/1, 80/3, 81/2 மற்றும் 83/1 உள்ள கிணறுகள் மழை மற்றும் கீழ்பவானி கால்வாயின் கசிவு நீரை ஆதாரமாக கொண்டது என தெரிவித்துள்ளார். மேலும் கல்குவாரிகள் கீழ்பவானி கால்வாயில் இருந்து 50 மீட்டருக்கு அப்பால் தான் இருக்க வேண்டும் என்ற விதி உள்ளதால் கீழ்பவானி கால்வாய் ஓரம் விவசாய பூமிகளாகத்தான் இருக்க வேண்டும். ஆகையால் வாய்க்கால் ஓரமும், பாறை இல்லாத இடத்தில் விவசாயம் செய்ய கிணறும், மின் இணைப்பும் தேவை என்பதால் இந்த மின் இணைப்பிற்கு முயற்சி செய்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

10.4 மேலும், 21.11.2011 நாளிட்ட அறிவிக்கை இயல்பு வரிசையில் மின் இணைப்பு பெற 5 ஆண்டு கால அவகாசம் கொடுத்து வழஙகப்பட்டதாகவும் மேலும் அதில் 03.11.2010 வழஙகப்பட்ட நிபந்தனைகள்படி குறிப்பிட்ட தேதிக்குள் தஙகளது தயார் நிலையை பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டபின் அனைத்து ஆவணஙகளுடன் மனு சமர்பிக்கப்பட்டதாகவும் அந்த மனு உதவி மின்பொறியாளர்/நசியனூர் அவர்கள் புல எண் 82/1B மற்றும் 80/1 திறந்த வெளி கிணறு ஆகியவைகளை கள ஆய்வு செய்து புல எண் 80/1 ல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி தயார் நிலை பதிவு செய்ய மனு 10.8.2015–ல் கொடுக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**10.5** எனவே, புல எண்.**82/1B**ல், இருந்த திறந்த வெளி கிணற்றுக்கு மின் பதிவு எண் **2601** நாள் **15.03.1990** ல் செய்யும் போது கிணறு இருந்தது அதற்கு அப்போது இருந்த கிராம நிர்வாக அலுவலர் சான்று செய்துள்ளார் என்றும், அதனை மின் அதிகாரிகள் பார்வையிட்டு மின் பதிவு செய்துள்ளதாகவும், **2002**–ல் கிணறு உள்ளதையும், கிணறு தண்ணீர் இன்றி வறண்டு உள்ளதையும் கிராம நிர்வாக அலுவலர் சான்று செய்துள்ளார் எனவும், தற்போது கிராம நிர்வாக அலுவலர் புல எண் 82/1B-ல் கல் உடைத்து ஒரே பாறை குழியாக உள்ளதால் கிணறு மூடப்பட்டது என்றும் புல எண் 82/1B-ல் இருந்த கிணறு இன்றும் இரண்டு பக்கச் சுவற்றுடன் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**10.6** எனவே, புல எண் 82/1B-ல் உள்ள கிணறு போதிய தண்ணீர் இன்றி வறண்டுள்ளதாலும் புல எண் 80/1-ல் உள்ள கிணறு போதிய தண்ணீருடன் விவசாய பயன்பாட்டில் உள்ளதாலும் கந்தாம்பாளையம் கிராமம் புல எண் 82/1B-க்கு பதிவு செய்த விவசாய மின் இணைப்பை தனது மனைவி விஜயலட்சுமி பெயரில் இருந்து தனது பெயருக்கு 80/1-ல் உள்ள கிணற்றுக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு கோரியுள்ளார்.

**10.7** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய வாதத்தில் திருமதி விஜயலட்சுமி, க/பெ. நல்லசாமி என்பவர் இயல்பு வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்ப பதிவு எண் **2601/1989–90**, நாள் **15.03.1990** மூலமாக விண்ணப்பம் பதிவு செய்ததாகவும் இதனை தொடர்ந்து சுயநிதித் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற சம்மத கடிதம் **08.08.2002** ல் அளித்ததாகவும், இதன் அடிப்படையில் உதவி மின்பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் பொழுது சர்வே எண் **82/1B** –ல் அமைந்துள்ள திறந்தவெளி கிணறு மூடப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**10.8** சிறப்பு முன்னுரிமையில் மின் இணைப்பு வழஙக விண்ணப்பதாரருக்கு தயார் நிலை பதிவு செய்யுமாறு க.எண்.செ.பொ.நகரியம், ஈ.வ.ஆ/கோ.விவ/எ**631/2010**, நாள் **03.11.2010** மற்றும் க.எண்.செ.பொ.நகரியம், ஈ.வ.ஆ/கோ.விவ/எ**631/2010**, நாள் **21.11.2011** ஆகிய கடிதஙகளின் வாயிலாக தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**10.9** கந்தாம்பாளையம் கிராமம், சர்வே எண் **82/1B**–ல் அமைந்துள்ள நிலம் திரு நல்லசாமி அவர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளதாகவும், எனவே அவ்விண்ணப்பத்தினை திரு நல்லசாமி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக்கோரியும், மேலும் அந்நிலத்தில் பாறைகள் உடைக்கப்பட்டதின் காரணமாக அதில் அமைந்துள்ள கிணறு மூடப்பட்டுவிட்டதால் திரு

நல்லசாமி அவர்களுக்கு சொந்தமான சர்வே எண் 80/1–ல் அமைந்துள்ள மற்றொரு திறந்தவெளிக் கிணற்றிற்கு சர்வே எண் மாற்றம் செய்து தர கோரியும் 10.08.2015 அன்று விண்ணப்பம் செய்திருந்ததாகவும், இதன் அடிப்படையில் உதவி மின்பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்கள் அவ்விண்ணப்பத்தினை பரிசீலிக்கும் பொழுது கிராம நிர்வாக அலுவலர் சான்றிலும் மற்றும் தனி வரைப்படத்திலும் கிணறு குறிப்பிட்டுள்ளது. ஆனால் அடங்கலில் பாறை தரிசு என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும் அதன் தொடர்பாக வட்டாட்சியரிடம் சான்று பெற்று அளிக்குமாறு உதவி மின்பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்களால் 17.08.2015 அன்று திரு நல்லசாமி அவர்களுக்கு கடிதம் வழஙகப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

10.10 அதன் தொடர்பாக மீண்டும் திரு நல்லசாமி அவர்கள் 23.09.2015 மற்றும் 04.11.2015 நாளிட்டு அளித்துள்ள முறையீட்டு மனுவுடன் கூடிய ஆவணஙகளை பரிசீலனை செய்ததில், கந்தாம்பாளையம் கிராமம், சர்வே எண் 82/1B–ல் அமைந்துள்ள நிலம் 18.02.2010 அன்று பாக சாசனத்தின் அடிப்படையில் திரு நல்லசாமி அவர்களுக்கு சொந்தமாகிறது என்பதும் ஏற்கனவே மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் அனுமதி பெற்று 1996 முதல் 2007–ம் ஆண்டு வரையிலான காலகட்டஙகளில் அந்நிலத்தில் வணிக நோக்கத்திற்காக கல் உடைக்கப்பட்டு அதில் அமைந்துள்ள விவசாய நிலம் அழிக்கப்பட்டும், கிணறு மூடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேலும் உதவி மின்பொறியாளர்/இ.பே/நசியனூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்பொழுதும் மேற்படி நிலம் முற்றிலும் பாறைகள் வெட்டப்பட்டு குழியாக உள்ளதும், விவசாய பயன்பாடில்லாமல் இருந்து வருவது கண்டறியப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

10.11 என்னுடைய வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி ஒரு விவசாய விண்ணப்பத்தின் பதிவை ஒரு சர்வே எண்ணிலுள்ள கிணற்றிலிருந்து வேறு கிணற்றிற்கு மாற்ற வேண்டும் எனில், முதலில் பதிவு செய்யப்பட்ட கிணற்றில் தண்ணீர் இல்லை என்றாலும் நீர் விவசாயத்திற்கு தேவையான அளவு இல்லையென்றாலும், நீர் மாசுபட்டு இருந்தாலும் ஒருவரின் விவசாய மின்இணைப்பு அவருக்குச் சொந்தமான வேறு கிணற்றிற்கு மாற்றப்படலாம். ஆனால், மாற்றப்படுவதற்கு கூறப்படும் காரணத்திற்கான சான்றுகள் சம்பந்தப்பட்ட அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து பெறப்பட்டு இருக்க வேண்டும் என அறிய படுகிறது.

10.12 மேலும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி மேல்முறையீட்டாளரால் மின்னிணைப்பு கோரி பதிவு செய்யப்பட்ட புல எண்.82/1B –ல் மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் அனுமதி பெற்று 2011–ம் ஆண்டு வரையிலான காலகட்டங்களில் அந்நிலத்தில் வணிக நோக்கத்திற்காக கல் உடைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. எனவே, அக்கால கட்டங்களில் விவசாய பணி ஏதும் நடைபெற்றதாக சான்று இல்லை. மேலும் மேல்முறையீட்டாளர் அந்நிலத்தில் பாறைகள் உடைக்கப்பட்டதின் காரணமாக அதில் அமைந்துள்ள கிணறு மூடப்பட்டுவிட்டதால் திரு நல்லசாமி அவர்களுக்கு சொந்தமான சர்வே எண் 80/1–ல் அமைந்துள்ள மற்றொரு திறந்தவெளிக் கிணற்றிற்கு சர்வே எண் மாற்றம் செய்து தர கோரியும் 10.08.2015 அன்று விண்ணப்பம் செய்துள்ளார். ஆனால் கிராம நிர்வாக அலுவலர் சான்று மற்றும் அடங்கல் ஆகியவற்றில் கிணறு குறித்து முரண்பட்ட தகவல்கள் பெறப்பட்டதால் உதவி மின்பொறியாளர்/இ.பே/ நசியனூர் அவர்களால் வட்டாட்சியரிடம் சான்று பெற்று அளிக்குமாறு கோரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான சான்றை மேல்முறையீட்டாளர் பெற்று சமர்ப்பிக்க வில்லையென்றும் அறியமுடிகிறது.

10.13 வழக்கெழுவினா இரண்டிலுள்ள தீர்வின்படி சர்வே எண் மாற்றக்கோரும் விண்ணப்பதாரர்கள் இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காக அந்த பகுதி உதவி கோட்ட பொறியாளரால் விசாரிக்கப்பட்டு புதிய கிணறும், நீர் பயன்படுத்தப்படும் நிலஙகளும், நுகர்வோருக்கே சொந்தம் என்பதையும், நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணஙகளுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

10.14 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் விவசாய மின்னிணைப்பு கோரி பதிவு செய்யப்பட்ட புல எண்.82/1B –ல் உள்ள கிணற்றின் நீராதாரம் மற்றும் அப்புல எண்ணில் விவசாயம் நடைபெற்று வந்ததற்கான ஆதார ஆவணஙகள் ஏதுமில்லை. மேலும், மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் அனுமதி பெற்று 2011–ம் ஆண்டு வரையிலான காலகட்டஙகளில் அந்நிலத்தில் வணிக நோக்கத்திற்காக கல் உடைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. வழக்கெழுவினா இரண்டிலுள்ள தீர்வுகளின்படி பதிவு செய்யப்பட்ட கிணற்றில் தண்ணீர் இல்லை என்றாலும் நீர் விவசாயத்திற்கு தேவையான அளவு இல்லையென்றாலும், நீர் மாசுபட்டு இருந்தாலும் ஒருவரின் விவசாய மின்இணைப்பு அவருக்குச் சொந்தமான வேறு கிணற்றிற்கு மாற்றப்படலாம். ஆனால், மாற்றப்படுவதற்கு கூறப்படும் காரணத்திற்கான சான்றுகள் சம்பந்தப்பட்ட அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து

பெறப்பட்டு இருக்க வேண்டும் என அறிய படுகிறது. 17.07.2002 அன்று கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றில் கிணறு நீரில்லாமல் வறண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதன்பிறகு பாறைகுழியாக உள்ளது என தெரிவித்துள்ளார். ஆனால் அடஙகளில் சர்வே எண்.82/1B –ல் பாறை என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதால் அந்த சர்வே எண்ணில் கிணறு இல்லை என்றே கருதப்படவேண்டும். எனவே, கந்தாம்பாளையம் கிராமம் புல எண் 82/1B-க்கு பதிவு செய்த விவசாய மின் இணைப்பை தனது மனைவி விஜயலட்சுமி பெயரில் இருந்து தனது பெயருக்கு 80/1-ல் உள்ள கிணற்றுக்கு பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழஙகிட கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை வழக்கெழு வினா இரண்டிலுள்ள விதிகளின்படி ஏற்புடையதல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

**11.0 <u>முடிவுரை</u> :-**

11.1 மேலே பத்தி **10–**இல் உள்ள தீர்வுகளின்படி, ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.**69/2020** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

**1.** திரு.மு.நல்லசாமி,
**16**, இந்திராகாந்தி வீதி,
பெருந்துறை சாலை,
ஈரோடு – **638 011.**

**2.** செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**948**, EVN ரோடு, ஈரோடு – **638 009.**

**3.** உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**948**, EVN ரோடு, ஈரோடு – **638 009.**

4. உதவி மின்பொறியாளர்/நசியனூர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SF No. 45/4, திஙகலூர் ரோடு,
நசியனூர் – 638 107.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, இ.வி.என். ரோடு,
ஈரோடு – 638 009.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.